(RULE 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Virudhunagar

Calendar Case /
Summery Trial Case /
Sessions Case
} S.T.C.No. 970/2022

Deposition of witness for } Prosecution P.W.2
Defence
Court

| | |
|---|---|
| Name | : அகோரமூர்த்தி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969 ) of the day of 19.08.2024

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரையில் வசித்து வருகிறேன். நான் மெடிக்கல் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.ஆ.1 எனது தகப்பனார் ஆவார். ஆஜர் எதிரி எங்கள் வீட்டின் முன்பு கழிவுநீரை வெளியேற்றம் செய்து வந்ததாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 21.07.2022ம் தேதியில் மாலை 7.00 மணியளவில் எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. எனது தகப்பனார் மருத்துவமனையில் அனுமதித்தாக தகவல் வந்தது. நான் உடனே கிளம்பி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு எனது தகப்பனாரை விசாரிக்கும்போது ஆஜர் எதிரி எனது தகப்பனாரை தகாத வார்த்தையால் திட்டி கையால் நெஞ்சில் அடித்து கொலைமிரட்டல் விடுத்தார் என்று தகவல் சொன்னார். நான் மருத்துவமனையில் எனது

அப்பாவுடன் இருக்கும்போது காவல்துறையினர் வந்து விசாரித்தார்கள். அப்போது எனது தகப்பனார் சொல்ல நான் புகார் மனு எழுதிக்கொடுத்தேன். அதில் எனது தகப்பனார் கையெழுத்து செய்தார். அறிவேன் சாட்சியாக நான் கையெழுத்து செய்தேன். புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி **அ.சா.ஆ.2** ஆகும். காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை:–**

குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரப்பட்டது.